# GS - Indian History (வரலாறு) QA வரலாற்றுக்கு முந்தைய காலம் (South Indian History) Notes

**வரலாறு**

நமக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை ஆதாரங்களுடன் தொகுத்துக் கால வரிசைப்படி கூறுவது வரலாறு ஆகும்.



**முக்கியத் தோற்றங்களின் ஆண்டுகள்**

பூமியின் தோற்றம் - 460 கோடி ஆண்டுகளுக்கு முன்
மனிதனின் தோற்றம் - 40,000 ஆண்டுகளுக்கு முன் (ஹோமோ ப்பியன்ஸ்)
வேளாண்மை தோன்றிய காலம் - சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்
நகரங்களின் தோற்றம் - 4,700 ஆண்டுகளுக்கு முன்

**வரலாற்றுக்கு முந்தைய கால இந்தியா**

பழைய கற்காலம் - Palaeolithic age (கிமு 10,000 ஆண்டுகளுக்கு முன் ).
புதிய கற்காலம் - Neolithic age (கிமு 10,000 -4000)
செம்புக் கற்காலம் - Chalcolithic age(கிமு 3000 - 1500)
இரும்புக் காலம் - Iron age (கிமு 1500 -600)

*Answers given at the end of the page. or click on check answer link*

1. கீழ்க்கண்டவைகளை காலமுறைப்படி வரிசைப்படுத்தி எழுதுக :

I. புதிய கற்காலம்

II. இடைக் கற்காலம்

III. செப்புக் காலம்

IV. பழைய கற்காலம்.

இவற்றுள் :

a. II, III, 1 மற்றும் IV

b. IV, II, 1 மற்றும் III

c. I, III, II மற்றும் IV

d. III, 1, IV மற்றும் II.

Check Answer

**பழைய கற்காலம் - Palaeolithic age**

மடியில் குழந்தையைக் கட்டிக் கொண்டு ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப் பிரதேசத்திலுள்ள பிம்பேட்கா குகையில் உள்ளது.

**இந்தியாவில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள்**

மத்திய பிரதேசம் - சோன் ஆற்றுப்படுகை, பிம்பேட்கா, மஹேஸ்வா.
ராஜஸ்தான்- லூனி ஆற்றுச் சமவெளி.
கர்நாடகம் - பாகல்கோட்.
ஆந்திரப்பிரதேசம் - கர்னூல் குகைகள், ரேணிகுண்டா.
தமிழ்நாடு - வடமதுரை, அத்திரம்பாக்கம் , பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்.



**புதிய கற்காலம் (Neolithic Age)**

மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த படிநிலையைப் புதிய கற்காலம்

**வாழ்க்கை முறை**

மண் குடிசைகளை அமைத்தான்.
மனிதன் குடியிருப்புகளை உருவாக்கிக் கூட்டமாக வாழ்ந்தான்.
குடிசைகள், வட்டம் அல்லது நீள் வட்டவடிவமானவை. இவை தரை மட்டத்திற்குக்கீழ், பள்ளமாக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டன.
கூரைகளும் வேயப்பட்டன.
பயிர்த்தொழில் செய்தனர்.
விலங்குகளைப் பழக்கி வளர்த்தான்; மேய்ச்சல் தொழில் செய்தான். கோடரி, எலும்புக் கைப்பிடிகள், தூண்டில் முள், ஊசிகள், வெட்டுக் கருவிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன.
புதிய கற்காலத்தில், இறந்தோரைப் புதைக்கும் பழக்கம் இருந்தது. அவ்வாறு புதைக்கும்போது, அவர்களுடன் பழகிய விலங்குகளையும் சேர்த்து, வீட்டின் முற்றத்திலேயே புதைத்தனர்.

**புதிய கற்காலக் கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள்**

திருநெல்வேலி
தான்றிக்குடி
புதுக்கோட்டை
திருச்சிராப்பள்ளி, சேலம்



திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கி.பி.2004 ம் ஆண்டு அகழ்வாராய்ச்சிப் பணியைத் தொடர்ந்த போது ஒரே இடத்தில் 160க்கும் அதிகமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**செம்புக் கற்காலம் (Chalcolithic Age) - (உலோகக்காலம் )**

புதிய கற்கால முடிவில் செம்பு என்னும் உலோகத்தின் பயனை அறிந்து , அதில் கருவிகள் செய்து பயன்படுத்தத் தொடங்கினர் .எனவே, அக்காலம் செம்புக் கற்கருவிகள் காலம் என்று குறிப்பிடப்படுகிறது.

* ஹரப்பா நகர நாகரிகம் இக்காலத்தைச் சேர்ந்தது

**செம்புக் கற்காலக் கருவிகள்**



**இரும்புக் காலம் (Iron Age)**

இரும்பினால் கருவிகள் செய்த காலம் இரும்புக்காலம் எனப்படும்.
உலோகத்தை உறுக்கிக் கருவிகள் செய்த காலம் .
இக்காலத்தில் வீட்டுச்சாமான்களும், பயிர்த்தொழில் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன.
வேதகால நாகரிகம் இரும்புக் காலத்தைச் சார்ந்தது.



மத்திய பிரதேசம் – பிம்பேட்கா

**உலோகக் கலவைகள்**

இரும்பு + குரோமியம் = சில்வர் செம்பு + வெள்ளீயம் = வெண்கலம் செம்பு + துத்தநாகம் = பித்தளை இரும்பு + மாங்கனீசு = எஃகு

Answers

1. IV, II, 1 மற்றும் III